JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.CC 618/2024
PW.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபால் | தாலுகா | ஆலங்குளம் |
| தந்தை பெயர் | அர்ச்சுனன் | தொழில் | கூலி |
| கிராமம் | பேராமணி | வயது | 47 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 21.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது பேராமணி குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி முருகன் என்பரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். தேதி மாதம் நினைவில் இல்லை. கடந்த 7 வருடங்களுக்கு முன்பு மாலை நான் வேலைக்கு சென்று விட்டு வரும்போது செல்வி என்பவர் வீட்டிற்கு அருகில் போலிசார் நின்று விசாரித்து கொண்டிருந்தார்கள். நான் என்ன என்று கேட்டபோது போலிசார் விசாரித்து கொண்டிருந்ததையும் எழுதி வைத்திருந்த பேப்பரை படித்து காண்பித்து கையொப்பம் கேட்டார்கள் நான் செய்து கொடுத்தேன். என்னுடன் முருகனும் கையொப்பம் செய்தார். போலிசார் எதற்காக அங்கு வந்தார்கள் என்று தெரியாது. மேற்படி பார்வைமகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் அ.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதிபிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 03.03.2019.ம் தேதியன்று 15.30 மணிக்கு நானும், சாட்சி முருகன் என்பவரும் சம்பவ இடம் அருகே நின்று கொண்டிருந்தபோது ஆழ்வார்குறிச்சி காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர்,

மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், சாட்சி முருகனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.CC 618/2024
PW.4

| பெயர் | சுப்புக்குட்டி | தாலுகா | ஆலங்குளம் |
|---|---|---|---|
| தந்தை பெயர் | உய்க்காட்டான் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | பேராமணி | வயது | 70 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 21.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது பேராமணி குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். பக்கத்து வீட்டுக்காரர்கள். அசா.1 வடிவு என் மனைவி, அசா.2 செல்வி என் மகள். அசா.3 பெருமாள் என் மருமகன். சாட்சி ஐயப்பன் என்பவரை தெரியும். அவர் இறந்து விட்டார். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 7 வருடங்களுக்கு முன்பு என் மனைவி என் பேத்தியை ஏசினார். அதனால் பக்கத்து வீட்டு மாணிக்கம் என் பிள்ளையை தானே பேசுகிறாய் என என் மனைவியை பார்த்து தேவுடியா, பலவேட்ட, ஒப்பனஒலி என அசிங்கமாக பேசினார். எதிரி பிரபாகரன்அரிவாளை கொண்டு இந்த கிழவியை வெட்டி விடு என்று என் மனைவியை பெண் என்றும் பாராமல் அரிவாளை கொண்டு தலையில் கொத்தி விட்டார். என்றைக்கு இருந்தாலும் என் கையால் தான் உன் சாவு என என் மனைவியை பார்த்து கூறினார். பின்னர் என் மனைவியை என் மகன் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு சென்று சேர்த்தார்.

அங்கு என் மனைவி சிகிச்சையில் இருந்த போது போலிசார் அங்கு வந்தார்கள். என் மனைவியால் பேச முடியவில்லை. நான் போலிசாரிடம் நடந்த விவரத்தை சொன்னேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில்உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi